Hand in hand with our artisans...

# தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

**759, அண்ணா சாலை, சென்னை–600 002.**

**தொலைபேசி எண்.**: 28521271, 28521325
28521798, 28525094

புகைப்படம்

## அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான கைத்திறன் போட்டி – 2022–2023

### விண்ணப்ப படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கைவினைஞரின் பெயர்<br>1) தமிழ்<br>2) ஆங்கிலம் | : | |
| 2. | முழு விலாசம்<br>(அஞ்சல் எண்ணுடன்)<br>(அத்தாட்சி இணைக்கப்படவேண்டும்) | : | |
| 3. | தொலைபேசி எண்/செல்போன் எண். | : | |
| 4. | பிறந்த தேதி மற்றும் வயது<br>(அத்தாட்சி இணைக்கப்படவேண்டும்) | : | |
| 5. | கல்வித் தகுதி | | |
| 6. | தொழிற்கல்வி குறித்த விவரங்கள் அல்லது பாரம்பரிய முறையில் / குருகுல முறையில் தொழிற் கல்வி கற்ற விவரம் (சான்றிதழ் இருந்தால் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 7. | கைவினைஞர்களுக்கான கைத்திறன் போட்டியில் கலந்துகொள்ள தேர்ந்தெடுக்கும் கைத்திறத் தொழில் | : | |
| 8, | ஆதார் எண் | | |
| 9. | வங்கிக்கணக்கின் முதல் பக்கம் | | |
| 8. | இதர விவரங்கள் (ஏதேனும் இருப்பின்) | : | |

கைவினைஞரின் கையொப்பம்

நாள்

புகைப்படம்
(பரிந்துரை
அலுவலர்
ஒப்புதலுடன்)

# பரிந்துரைச் சான்றிதழ்

திரு/திருமதி/செல்வி .........................................................................................

த/பெ......................................................................................... வயது ................................

............................................................................ கைத்திறத் தொழிலில் ஈடுபட்டுள்ளார் என்பதோடு அவருடைய விண்ணப்பத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவையென சான்றளித்து, கைவினைப் போட்டிக்கு பரிசீலிக்கலாம் எனவும் பரிந்துரை செய்கிறேன். இதுவரையிலும் இவர் அடுத்த தலைமுறை கைவினைஞர் விருது பெறவில்லை என்று உறுதி அளிக்கிறேன்.

கைவினைஞர் கையொப்பம்

பரிந்துரை செய்யும் அலுவலர்

குறிப்பு

பூம்புகார் விற்பனை நிலைய மேலாளர்கள் / உற்பத்தி நிலைய மேலாளர்கள் / அபிவிருத்தி ஆணையர் அலுவலகத்தைச் சார்ந்த அந்தந்த பகுதி உதவி இயக்குநர்கள் (கைத்திறன்) மற்றும் பிற அலுவலர்கள், கிராப்ட் கவுன்சில் (தமிழ்நாடு / இந்தியா / உலகம்) ஆகியோரில் யாராவது ஒருவரால் தேர்வில் கலந்துகொள்ள விரும்பும் இளம் கைவினைஞர் பரிந்துரை செய்யப்படவேண்டும்.

Poompuhar

Hand in hand with our artisans...

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்**

**759, அண்ணா சாலை, சென்னை–600 002.**

## அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான கைத்திறன் போட்டி தேர்வுக்கான விதி முறைகள்

1. தமிழ்நாட்டின் பாரம்பரியம் மிக்க கைத்திறத் தொழில்கள் நீடித்திருக்கவும் மற்றும் அடுத்த தலைமுறையினருக்கு அவற்றைக் கொண்டு செல்வதற்கும் இளைஞர்களை இத்துறையில் ஊக்கப்படுத்திட தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் 2013–14ஆம் ஆண்டு முதல் அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான கைத்திறன் போட்டி நடத்தி வருகிறது. நடப்பு ஆண்டு (2022–23) தேர்வுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

2. இப்போட்டியில் 150 கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வெள்ளிப்பதக்கம், சான்றிதழ் மற்றும் ரொக்கப்பரிசு ரூ.2,000/– வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுவார்கள்.

3. தமிழ்நாட்டைச் சேர்ந்த கைவினைஞர்கள் மட்டும் இத்தேர்வில் கலந்துகொள்ளலாம்.

4. இப்போட்டியில் கலந்துக் கொள்ளும் கைவினைஞர்கள் 30 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். (வயதிற்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்).

5. கீழ்க்கண்ட 16 விதமான கைத்திறத் தொழில்களில் கைவினைப் போட்டிகள் நடத்தப்படும்.

| | | | |
|---|---|---|---|
| (1) | பஞ்சலோக சிலைகள் | (9) | காகிதக்கூழ் பொம்மைகள் |
| (2) | பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளை கலைப்பொருட்கள் | (10) | பாய்நெசவு |
| (3) | தஞ்சாவூர் ஓவியங்கள் | (11) | மூங்கில் மற்றும் பனைஓலை பொருட்கள் |
| (4) | தஞ்சாவூர் கலைத்தட்டுகள் | (12) | நெட்டி வேலைப்பாடு |
| (5) | மரச்சிற்பங்கள் | (13) | நார் பொருட்கள் |
| (6) | கற்சிற்பங்கள் | (14) | கோவில் நகைகள் |
| (7) | சுடு களிமண் சிற்பங்கள் | (15) | சித்திரத் தையல் வேலை |
| (8) | அப்ளிக் மற்றும் கலம்காரி வேலைகள் | (16) | இதர கைவினைப் பொருட்கள் |

6. கைத்திறத் தொழில்களில் பிரசித்தி பெற்ற இடங்களை மையமாகக் கொண்டு தேர்வு நடத்தப்படும். தேர்விற்கான மையம் மற்றும் தேர்வு நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

7. தேர்வில் கலந்துகொள்ள விரும்பும் இளம் கைவினைஞருடைய விண்ணப்பம் கீழ்க்கண்ட அலுவலர் ஒருவரால் பரிந்துரை செய்யப்படவேண்டும் :

பூம்புகார் விற்பனை நிலைய மேலாளர்கள் / உற்பத்தி நிலைய மேலாளர்கள் / அபிவிருத்தி ஆணையர் அலுவலகத்தைச் சார்ந்த அந்தந்த பகுதி உதவி இயக்குநர்கள் (கைத்திறன்) மற்றும் பிற அலுவலர்கள், கிராப்ட் கவுன்சில் (தமிழ்நாடு / இந்தியா / உலகம்)

8. தேர்வில் கலந்துகொள்ளும் கைவினைஞர்கள் விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட ஆவணங்களை கண்டிப்பாக இணைத்து குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

அ) விண்ணப்பத்துடன் இரண்டு புகைப்படங்கள் கண்டிப்பாக இணைக்கப்படவேண்டும்.

ஆ) இருப்பிட முகவரிக்கான அத்தாட்சி – ( குடும்ப அட்டை / ஆதார் அட்டை / வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுநர் உரிமம் / புகைப்படத்துடன் கூடிய வங்கி கணக்கு புத்தகம் ) ஏதாவது ஒன்றின் நகல் இணைத்திடல் வேண்டும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் கீழே கண்டுள்ள அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள் 28.04.2023 (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணி வரை (அலுவலக நாட்கள் – திங்கள் முதல் வெள்ளி வரை).

10. **விண்ணப்பங்கள் பூம்புகார் விற்பனை மற்றும் உற்பத்தி நிலைய மேலாளர்கள் மூலமாக மட்டுமே தலைமை அலவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

**தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்**
தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்
759, அண்ணா சாலை, சென்னை–600 002.